# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2014

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT

| | | |
|---|---|---|
| මුදල් අමාත්‍යාංශය | நிதி அமைச்சு | Ministry of Finance |
| මහලේකම් කාර්යාලය | செயலகம் | The Secretariat |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

| |
|---|
| அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டில் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது. |

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


01. திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள், பணிகள் மற்றும கடமைகளும் பொறுப்புக்களும் 02

02. நிதி நிருவாகம் 04

03. பௌதீக செயலாற்றுகை 05

3.1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல் 05

3.2 உள்ளகக் கணக்காய்வுகளுக்கான வழிகாட்டல்களை வழங்குதல் 06

3.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் 06

3.4 நிதி திட்டமிடல் அமைச்சு மற்றும் திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள 07

3.5 நிதி திட்டமிடல் அமைச்சின் பல்வேறு திணைக்களங்களின் கீழ தொழிற்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் 08

3.6 விசேட புலனாய்வு நடவடிக்கைகள 08

04 மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிருவாகம் 11

4.1 திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு 11

4.2 அலுவலக உத்தியோகத்தர்கள் 31.12.2014 12

4.3 2014 ஆம் ஆண்டில் பயிற்சிகளும் திறன் அபிவிருத்தியும் 13

4.3.1 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயிற்சிகள 13

4.3.2 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சிகள 14

## 01. திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் கடமைகளும் பொறுப்புக்களும்

### நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்.

### செயற்பணி

முகாமைத்துவக் கணக்காய்வினூடாக அரச சேவையின் பொறுப்புக்களை விருத்தி செய்வதற்கும் பெறுமதியைச் சேர்ப்பதற்கும் சுயாதீனமாக நோக்கத்தை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குதல்.

### குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.
3. முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.
4. நிதி அமைச்சு மற்றும் பொதுத்திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வுகள் மூலம் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல்.
5. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.
6. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகள், சம்பவங்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள்

**கடமைகளும் பொறுப்புக்களும்**

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. நிதி அமைச்சு, திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.

3. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

4. உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

5. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் உள்ளகக் கணக்காய்வுத் திறன்களை விருத்தி செய்தல்

6. நிதி அமைச்சில் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல், ஏனைய அமைச்சுக்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

7. அரச துறைகள் பின்பற்றுகின்ற அபாயக் கணிப்பீட்டு முறைமையின் பண்புசார்ந்த தன்மையைக் கணிப்பிடுதல்.

8. விசேட புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

# 02. நிதி நிருவாகம்

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம மதிப்பீட்டின் மூலம் செலவு விடயம் 324 நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாவிக்கப்பட்டபோது திருத்தப்பட்டது.
அந்த ஏற்பாடுகளு செலவிடப்பட்ட விதழ் கீழே காட்டப்படுகின்றன.

| செலவு விபரம் | வரவு செலவு மதிப்பீட்டு (ரூபா) | திருத்திய வரவு செலவு மதிப்பீட்டு (ரூபா) | நி.ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | எஞ்சிய ஏற்பாடுகள் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் (அ) | **26,300,000** | **26,300,000** | **-** | **24,645,919** | **1,654,081** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 17,800,000 | 17,500,000 | 174,307 (174,307) | 17,111,035 | 388,965 |
| ஏனைய செலவுகள் | 8,875,000 | 8,800,000 | 65,333 (65,333) | 7,534,884 | 1,265,116 |
| மூலதனச் செலவுகள் (ஆ) | **1,600,000** | **1,600,000** | **-** | **1,324,583** | **275,417** |
| 2001 கட்டடங்களும் நிர்மாணமும் | - | - | - | - | - |
| 2002 இயந்திரம் மற்றும் இயந்திர சாதனங்கள் | 200,000 | 200,000 | - | 197,950 | 2,050 |
| 2003 வாகனம் | 200,000 | 200,000 | - | 38,000 | 162,000 |
| 2102 அலுவலக உபகரணங்கள் | 200,000 | 200,000 | - | 193,428 | 6,572 |
| 2103 இயந்திரம் மற்றும் இயந்திர சாதனங்கள் | 500,000 | 500,000 | - | 449,800 | 50,200 |
| 2401 திறன் விருத்தி | 500,000 | 500,000 | - | 445,405 | 54,595 |
| மொத்தம் (அ) + (ஆ) | **28,275,000** | **27,900,000** | | **25,970,502** | **1,929,498** |

**அரசாங்க அலுவலர்களின் முற்பணம் பீ கணக்கு**

2014 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மையான செலவு(ரூபா) |
|---|---|---|
| உயர்ந்தபட்ச செலவு எல்லை | 3,000,000 | 1,913,225 |
| குறைந்தபட்ச கிடைப்பனவு எல்லை | 1,250,000.00 | 1,675,683 |
| உயர்ந்தபட்ச பற்று மீதி எல்லை | 10,000,000.00 | 7,268,597 |

# 03. பௌதீக செயலாற்றுகை

## 3.1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உள்ளகக் கணக்காய்வாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது நிதமும் அவர்களுக்கு ஒத்துழைத்து வருகின்றது. அந்த நோக்கத்துடன் 2014 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| **நடைபெற்றி திகதி** | **விடயத் தலைப்பு** | **கலந்து கொண்டவர்கள்** |
|---|---|---|
| 17.03.2014 | அரச நிறுவனங்களின் செயற் பாட்டுத் தாமதங்களையும் வினைத்திறன் குறைநிலைகளையும் குறைப்பதற்கனை பயிற்சி நிகழ்ச்சி. | அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள், திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 28.10.2014 | உள்ளகக்கட்டுப்பாட்டு முறையினை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சி. | அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள், திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள். |
| 07.11.2014 | மாவட்டச் செயலகத்தின் செயல்முறையினை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சி. | வடமாகாண மாவட்டச் செயலகம், வடமாகாண சபை அலுவலகங்களின் பிரதான உள்ளகக் கணக்காய் வானர்கள். |
| 30.12.2014 | கணனி மயப்படுத்தப்பட்ட கணக்காய்வும் கணக்காய்வு முகாமைத்துவக் குளுக் கூட்டங்களை ஒழுங்கமைப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சி. | அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள், திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள். |

## 3.2. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்குதல

பின்வரும் துறைகளின் கணக்காய்வு நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனுடையதாகவும், வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்க குவதற்கான ஆரம்ப வரைபு வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது.

3.2.1 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் பொருளாதாரம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றைப் பரிசீலனை செய்வதற்கு செயலாற்றுகைக் கணக்காய்வு (Performance Audit) பற்றிய வழிகாட்டல்கள்.

3.2.2 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் தொடர்பான வழிகாட்டல்கள் தற்போது அந்த விடயத் துறைகள் பற்றிய மிகவும் பிரயோக ரீதியான அறிவைக் கொண்டுள்ள உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் நிபுணத்துவ அறிவுள்ள ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி தொடர்புடைய வரைவு வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. அடுத்த வருடத்தினுள் அந்த வரைவை மேலும் திருத்தம் செய்து வழிகாட்டலை வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுவுக்காக திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரசாங்கத் துறையின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல்

அரசாங்க அமைச்சுக்களில் தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுவுக்காக திறைசேரியின் பிரதிநிதிகளாக இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றுகின்றனர். அந்த அலுவலர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வினைத்திறனுடையதாக தொடர்ச்சியாக நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் பிரதானமாக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்துதல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்குவதும், அதன் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளது.

சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டினுள் 58 அமைச்சுக்களில் நடாத்தப்பட்ட 208 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குளுக்

கூட்டங்களுக்கும், 03 திணைக்களங்களில் நடைபெற்ற 09 முகாமைத்துவக் கணக்காய்வுக்குளுக் கூட்டங்களுக்கும், இலங்கைப் பாராளுமன்றம், பிரதமரின் அலுவலகம், சிரேட்ட அமைச்சர்களின் அலுவலகம், அரசாங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணையாளர் அலுவலகம், புகையிரதத் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்கவரத்துத் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 3.4. நிதி திட்டமிடல் அமைச்சு மற்றும் திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள்

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதான பணிகளிடையே முன்னணிப் பணியாகக் கருதப்படுகின்ற இந்தப் பணியானது, 2014 ஆம் ஆண்டுல் நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் பின்வரும் திணைக்களங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், நிதி அமைச்சுக்காகவம் ஏனைய சகல திணைக்களங்களுக்காகவும் ஒரு காலாண்டுக்குஒரு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் தலா 04 முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு தமது திணைக்களங்களினுள் பயன்வாய்ந்த முறையில் வினைத்திறனாக உள்ளக நிருவாக முறைகளையும் அதேபோன்று சிறந்த செயலாற்றுகை ஒன்றை மேற்கொள்வதற்கு பேருதவி கிடைத்துள்ளது.

1. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
2. தேசிய திட்டமிடல் திணைக்களம்
3. அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்
4. அரச நிதித் திணைக்களம்.
5. அரச கணக்குகள் திணைக்களம்
6. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
7. திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
8. அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்
9. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
10. முகாமைத்துவக் கணகக் ாய்வுத் திணைக்களம்
11. வர்த்தம், தரீ ்வை மற்றும் முதலீட்டு க் கொள்கைகள் திணைக்களம்
12. சட்ட அலுவல்கள் திணைக்களம்
13. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
14. அபிவிருத்தி நிதித் திணைக்களம்
15. இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

## 3.5. நிதி, திட்டமிடல் அமைச்சின் பல்வேறு திணைக்களங்களின் கீழ் தொழிற்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள்

முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்குள் நிதி அமைச்சின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களின் வெளிநாட்டு உதவிகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன. அதன் பிரகாரம், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் உலக வங்கியின் உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்திக்கு வசதிகளை வழங்கும் கருத்திட்டத்தின் (**SMEDeF**) 2014 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

## 3.6. விசேட புலனாய்வு நடவடிக்கைகள்

நிதி, திட்டமிடல் அமைச்சிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் ஆய்வு அறிக்கைகள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சின் செயலாளருக்கு அல்லது குறித்த நிறுவனத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், முறைப்பாட்டின் ஏதேனும் உண்மை இருப்பின் அது பற்றி குறிப்பிட்டு விசாரணைகளின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதே இதன் நோக்கமாகும்.

**2014 ஆம் ஆண்டில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் 12 ஆகும்.**


| தொடர் இல. | நிறுவனம் | நடவடிக்கை |
|---|---|---|
| 01 | மதிபபீட்டுத் திணைக்களம | மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டு உத்தியோகத்தரின் சட்டவிரோதமான முறையில் தனியார் வங்கிகளினதும் தனியார் நிதி நிறுவனங்களினதும் மதிப்பீட்டுச் சபைகளுடன் இணைத்து செயற்படல் தொடர்பான விசாரணை. |
| 02 | தொழில் நுட்ப தொழிற்கல்விப் பல்கலைக் கழகம் | மோட்டடார் வாகன பெர்மிற்களை பெற்றுக் கொள்கையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணை. |
| 03 | அரச ஈட்டு முதவீட்டு வங்கி | உதவிப் பொதுமுகாமையாளரால் (மனிதவளங்களும் , வழங்கல்களும்) ஓப்பந்த அடிப்படையில் - பிழையான கொடுப்பனவு தொடர்பான விசாரணை. |
| 04 | இலங்கைப் போக்கு வரத்துச் சபை (சிலாபம் டிப்போ) | இ.போ.ச. கணக்காளரின் தவறான முறையினாலான நிதிப்பயன் படுத்தல்கள். |
| 05 | தேசிய இரத்த வங்கி | வரவுப்பதிவேடுகள் தொடர்பான மோசடியான பதிவுகள் தொடர்பான விசாரணை. |
| 06 | தேசிய லொத்தர் சபை | தற்போதைய தலைவரின் முறையற்ற அணுகுமுறைகள் தொடர்பான விசாரணை. |
| 07 | நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு | ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை. |
| 08 | மதுவரித் திணைக்களம் | பிரதான கணக்காளரின ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை. |
| 09 | திறைசேரித் திணைக்களம | திறைசேரித் திணைக்களங்களின் விளையாட்டு மற்றும் நலன்புரி விடயங்களுக்காள நிதி சேகரிப்பு தொடர்பான விசாரணை. |
| 10 | பிரதேச அபிவிருத்தி வங்கி | பிரதேச அபிவிருத்தி வங்கியின் கட்டட ஓப்பந்தங்கள், பொருள் கொள்வளவுகள், விளம்பாம் செய்தல் ஆகியவற்றில் தரகு பெறுதல் தொடர்பான விசாரணை. |
| 11 | பிரதேச அபிவிருத்தி வங்கி | பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊழல், மோசடிகள், ஒழுக்கமின்மைகள் தொடர்பான விசாரணை. |
| 12 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | போலி நெற் வீடுகள் அமைப்பதில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணை. |

**2014 ஆம் ஆண்டின் இறுதியில் தொடர்ந்து கொண்டிருக்கும் விசாரணைகள்**

| தொடர் இல. | நிறுவனம் | நடவடிக்கைகள |
|---|---|---|
| 01 | தொழில் நுட்ப தொழிற்கல்விப் பல்கலைக் கழகம் | பிழையான நிதிப்பியோகங்கள் தொடர்பான விசாரணை. |
| 02 | அணுசக்தி அதிகாரசபை | மோட்டார் வாகன பெமிற்களை மோசடியாகப் பெற்றுக் கொண்டமை தொடர்பான விசாரணைகள். |
| 03 | கொழும்பு கொமேஷல் உரக் கம்பனி | கொழும்பு கொமேஷல் உரக் கம்பனியுள் இடம் பெற்றுள்ள மோசடிகள் தொடர்பான விசாரணைகள். |
| 04 | தேசிய லொத்தர் சபை | பொது முகாமையாளரால் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விசாரணைகள். |
| 05 | இலங்கைச சுங்கத் திணைக்களம் | ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் உத்தியோகத் தாரல் கடத்திவாப்பட்ட 3கிலோ தங்கத்தை பிடிப்பதில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணை. |

## 04. மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகம்

### 4.1 திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு




அலுவலக உதவியார்கள் – 4; சாரதிகள் -5; ஆராய்ச்சி உதவியாளர - 1 (ஜனாதிபதி செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ளார் )

மு.உ- முகாமைத்துவ உதவியார்கள அ.பி. - அபிவிருத்தி உத்தியோகத்தர்

## 4.2. அலுவலக உத்தியோகத்தர்கள் 31.12.2014

| புதவிகள் | ஊழியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளநிலை | வெற்றிடம் |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதி பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| பணிப்பாளர் (/இல.நிர்.சேவை) | 01 | - | 01 |
| பணிப்பாளர் (இல.கண.சேவை) | 05 | 05 | - |
| பணிப்பாளர் (இல.திட்ட சேவை) | 02 | 02 | - |
| பிரதிப்பணிப்பாளர் உதவிப்பணிப்பாளர் (இல.கண.சேவை) | 07 | 01 | 06 |
| ஆராய்ச்சி உதவியாளர் ∃ அபிவிருத்தி உத்தியோகத்தர் | 06 | 05 | 01 |
| பொதுமுகாமைத்துவ உதவியார்கள் | 14 | 12 | 02 |
| சாரதிகள் | 07 | 05 | 02 |
| அலுவலக உதவியார்கள் | 04 | 04 | - |
| **மொத்தம்** | **48** | **36** | **12** |

### 2014 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்திற்கு வந்துள்ள அலுவலர்கள்

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி. டப்ளியு.கே.எச். பிரியந்தா விதான | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 02 | திருமதி. ரீ.டீ.என்.டீ. ரன்தெனிய | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 03 | திரு. பீ. டப்ளியு.பி.எம். விமலச்சந்திர | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 04 | திருமதி. எஸ்.டீ. எம். டயஸ் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 05 | திரு. எல்.ஏ.எம்.பீ.கே. அபயரத்ன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 06 | திருமதி. பிவினி விஜேவர்த்தன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 07 | திருமதி. டப்ளியு.டீ.எஸ்.கே. அழகியவண்ண | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 08 | திருமதி. எஸ்.எம்.ரீ. நிராசா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 09 | திரு. கே. ஜே. குமாரசிங்க | சாரதி |
| 10 | திரு. கே.பீ. வசன்த | சுாரதி |
| 11 | திரு. கே.டீ.எஸ். செனவிரத்ன | சுாரதி |
| 12 | திரு. ஏ.பீ. நாலக சந்தன | அலுவலக உதவியார்கள் |

**2014 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்கள்**

| | **பெயர்** | **பதவி** |
|---|---|---|
| 01 | திருமதி. சம்பிகா ரணசிங்க | பணிப்பாளர் (/இல.நிர்.சேவை) |
| 02 | திருமதி. ரீ.டீ.என.டீ. ரன்தெனிய | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| 03 | திரு. எல்.ஏ.எம்.பீ.கே. அபயரத்ன | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| 04 | திருமதி. ஏ.கே.எஸ். போதிகா நந்தனி | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| 05 | செல்வி. கே.ஏ.பீ.எம். குணரத்ன | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| 06 | திரு. கே.டீ.எஸ். செனவிரத்ன | சாரதி |
| 07 | திரு. கே.ஜீ. த சில்வா | சாரதி |
| 08 | திரு. ஆர்.என்.டப்ளியூ. முதலிகே | அலுவலக உதவியார்கள் |

**2014 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அலுவலர்கள்**

| | **பெயர்** | **பதவி** |
|---|---|---|
| 01 | திரு. பீ.டீ.எஸ். சந்திரலால் | சாரதி |

## 4.3. 2014 ஆம் ஆண்டில் பயிற்சிகளும் திறன் அபிவிருத்தியும்

### 4.3.1 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயிற்சிகள்

| பெயர் | பதவி | இடம்பெற்ற நாடு | பயிற்சிக் கற்கைநெறி | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|
| திரு. எஸ்.எம் தயாரத்ன | பணிப்பாளர் | இத்தாலி | World Congress of Accountants | 2014.11.10 - 13 |

### 4.3.2. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சிகள்

| பயிற்சிக் கற்கைநெறி | பயிற்சிக் காலம் | அலுவலகர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| தமிழ்மொழிப் பயற்சி | ஜனவரி 8 ஆம் திகதியிலிருந்து ஓவ்வொரு செவ்வாய்க் கிழமையும் | திரு. எச்.டீ.பீ. சரத் குமார | சாரதி |
| தாபனக் கோவையும் பிரமாணங்களும் | பேப்ரவரி 19, 20, 21 | திருமதி. எச்.டீ.டீ.எஸ். குணசேகர | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| கணக்கு லிகிதரின் கடமைகளும் பொறுப்புக்களும் | யூன் 23 | திருமதி. ஈ.எம்.ஜீ.எல். எக்கநாயக்க<br>திரு. டப்ளியு.பீ.எம். விமலச்சந்திர | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| English Conversation for Professionals | யூலை 24 ல் இருந்து நான்கு மாதங்கள் | செல்வி. வீ.ஐ. தில்கானி | உதவிப்பணிப்பாளர் |
| Master of Financial Economic | 01 வருடம் | திரு. ஏ.என். ஹப்புகல | பணிப்பாளர் |
| தமிழ்மொழிப் பயற்சி | செப். 20 – ஒக்ரோ. 01 | திரு. எச்.டீ.பீ. சரத் குமார | சாரதி |
| ஒழுங்காற்று நடைமுறைகள் | 26 ஆக | திருமதி. கே.ஏ.எம்.எச. கபுவத்த<br>திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| நிதிப்பிரமாணம் 104 இன்படி புலனாய்வு செய்தல் | 26 செப் | திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| தமிழ்மொழிப் பயற்சி | செப். 26 ல் இருந்து புதன் வெள்ளிக் கிழமைகள் | திரு. டப்ளியு.பீ.எம். விமலச்சந்திர | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு | ஓக். 9 - 13 | திருமதி. கே.ஆர்.ஆர். பெர்னான்டோ<br>திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | பொது முகாமைத்துவ உதவியார்கள் |
| Seminar on Taxation Proposals of the Budget 2015 | நவ. 20 | திருமதி. கே.ஏ.எம்.எச். கபுவத்த<br>திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>பொது மு. உதவி. |
| Microsoft Office and Email - Workshop | நவ. 26 | திரு. டீ.யூ.எஸ். விக்ரமஆராச்சி<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவந்த<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>திரு. ஏ.என. ஹப்புகல<br>செல்வி. ஏ.கே. குணசேகர | மேலதி பணிப்பாளர் நாயகம்<br>பணிப்பாளர் |
| Diploma in English for Professionals | நவ. 18 | திரு. எஸ்.எம். தயாரத்ன | பணிப்பாளர் |